CJM Court, Erode, CC.374/2022, PW.2, Dt.15.11.2022.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.374/2022**

Cross Examination of Witness

15.11.2022

**அ.சா.2- மாரியம்மாள்**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) என்னுடன் பிறந்தவர்கள் நான் இல்லாமல் இரண்டு பெண்கள், ஒரு பையன் என்றால், சரிதான். எனது சகோதரிகளின் பெயர்கள் பழனியம்மாள் மற்றும் ராகினி ஆகும். எனது தம்பி பெயர் மாரியப்பன். எனது அப்பாவின் பெயர் சித்தகவுண்டர் என்றால், சரிதான். நான் புதுப்பட்டியில் இருக்கும் என்னுடைய அப்பாவின் வீட்டில் தான் தற்போதும் குடியிருந்து வருகிறேன் என்றால், சரிதான். மேற்படி முகவரியில் 46 வருடங்களாக வாழ்ந்து வருகிறேன் என்றல், இல்லை, கள்ளாங்காட்டில் 10 வருடங்கள் குடியிருந்தேன்.

2) புரவிபாளையம் மற்றும் கள்ளாங்காட்டுத் தோட்டம் ஆகிய இரண்டும் வேறு வேறு கிராமங்கள் என்றால், சரிதான். கள்ளாங்காட்டுத் தோட்டம் எந்த கிராமத்தில் உள்ளது என்று என்னால் சொல்ல முடியாது என்றால், சரிதான். கள்ளாங்காட்டுத் தோட்டத்தில் இருக்கும் எனது நிலத்திற்கு அருகில் யார் யார் தோட்டம் இருக்கிறது என்று என்னால் சொல்ல முடியாது என்றால், சரிதான்.

(சாட்சி தனக்கு தலைசுற்றல் இருப்பதாகவும், மயக்கம் ஏற்படுவதாகவும், வாந்தி வருவதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்ததால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)